**பாலு சரவணசர்மா**
புரோகிதர்-ஜோதிடர்
9. 4வது தெருவு, கல்யாண நகர்
தாம்பரம் (மே), சென்னை 45

**கைபேசி 98403 69677**
மாற்று எண் 91691 69677
www.prohithar.com
www.thanigaipanchangam.com

# தெவசம் என்றால் என்ன? விளக்கம்

(மூல தகவலுக்கு http://www.prohithar.com/thithi.html இணைய பக்கத்தை பார்வையிடவும்)

**திவசம் செய்வது எப்படி**

வருடம் தோறும் இறந்த தேதிக்கு 45நாட்கள் முன்னர் திவசம் தேதி அறிந்து அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

உடன்பிறப்புகள் வருகைக்கு ஏதுவாக தேதியை முன்கூட்டி அவர்களுக்கு தெரிவிக்கவும், அலுவலகத்தில் விடுமுறை கடிதம் தரவும், தொழில் வணிகமாக இருப்பின் மாற்று ஏற்பாடுகளை முன்கூட்டி செய்யவும்

திவசம் செய்துவைக்கும் புரோகிதரிடம் பொருள்பட்டியலை பெற்று திவசம் முன்னாள் பூஜைபொருட்களை வாங்கவும்

ஆதரவற்றோர்களுக்கு அன்னதானம் செய்வதாக இருப்பின் அதற்கான ஏற்பாடுகளையும் செய்யவும்

ஒரு தாய் குழந்தைகள் அனைவரும் திவசம் அன்று ஒன்றுசேர்ந்து வழிபடுவதுதான் முன்னோர்களுக்கு முழுதிருப்தியை தரும்.

**திருமண வீட்டில் திவசம் தரலாமா?**

சாஸ்திரப்படி திவசம் செய்ய எந்த தடையும் இல்லை. திருமணத்திலேயே மண்டபத்தில் திருமண சடங்குகளுக்கு முன்னர் முதலில் செய்வதே முன்னோர் வழிபாடுதான் என்பதை நினைவில்கொள்ளவும். இது 'நாந்தி சிரார்தம்' என அழைக்கப்படுகிறது.

திருமண வீட்டில் திவசம் தரயியலவில்லை எனில் வெளியில் அல்லது சகோதரர் வீட்டில் திவசம் கடைபிடிக்கவும்

சிலசந்தர்பங்களில் திவசம் விடுபட்டால் திருமணத்திற்கு பின்னர் வரும் திதியில் திவசம் செய்வது நன்று

**திவசம் என்பது ஒரு கடமை சார்ந்த விஷயம் விருப்பம் சார்ந்த விஷயம் அல்ல**

**குழந்தை பிறந்த வீட்டில் திவசம் தரலாமா?**

தலைப்பிரசவத்திற்காக மகள் வீட்டிற்கு வரும் காலத்தில் திதி தரவேண்டுமெனில் வெளியில் தரவும். திவசம் தராமல் இருக்கக்கூடாது. இது சம்பிரதாய விஷயம்.

குழந்தை பிறந்த தீட்டு இருக்கும் காலத்தில் திவசம் வரும் பட்சத்தில் குழந்தை பிறந்த பிறகு சுபபுன்னியாவசனம் முடிந்த பின்னர் அடுத்து வரும் திதியில் முன்னோர்களுக்கு தவறாமல் திவசம் கடைபிடிக்கவேண்டும்.

**திவசம் அன்று உண்ணாநோன்பு (விரதம்) இருத்தல்**

முன்னாள் (அதிவாசம்) இரவு எளிய உணவு உட்கொண்டு மறுநாள் முன்னோர்களுக்கு தானம், படையல் (நெய்வேத்யம்) முடிந்த பின்னர் உணவு உட்கொள்ள வேண்டும் அதுவரை எளிய நீர்ம உணவு அதுவும் பலத்திற்காக மட்டும் உண்ணவேண்டும்.

முதியவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியவர்களுக்கு ஒருபொழுது உணவு (விரதம்) விஷயத்தில் விலக்கு உண்டு. உடல் நலம் கருதி மருந்து எடுத்துக்கொள்ள எளிய உணவை உட்கொள்ளவும்

திவசம் அன்று காலையில் பசுவிற்கு தீவனம், அகத்திகீரை தந்து பின்னர் நீர்ம ஆகாரம் எடுத்துக்கொள்வது நன்று. முற்றிலும் பட்டினி என்பது உடல்நிலையை பொருத்தது. மிகவும் வருத்திக்கொண்டு பட்டினி கிடப்பதால் உடல்பாதிப்பு ஏற்படக்கூடாது அது திவசம் செய்யும் காலத்தில் மிகவும் அசதியாக இருக்கும். பூஜையில் கவனம் செலுத்தமுடியாது.

**அடைப்பு என்றால் என்ன?**

**வேதசாஸ்திப்படி;** அவிட்டம் முதலாக ரேவதி வரை உள்ள நட்சத்திரத்தில் மரணம் ஏற்படின் அது தனிஷ்டா பஞ்சமி எனும் தோஷமாகும் இதுவே 'அடைப்பு' என அழைக்கப்படுகிறது. இது 6மீ அடைப்பு தோஷமாகும்

**ஜோதிஷ சாஸ்திரப்படி:**

ரோஹிணியில் இறந்தவர்களுக்கு 4 மீ அடைப்பு.

கிருத்திகை, உத்திரம் ஆகிய நட்சத்திரங்களில் இறந்தவர்களுக்கு 3 மீ அடைப்பு.

மிருகசீருஷம், புணர்பூசம், சித்திரை, விசாகம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் இறந்தவர்களுக்கு 2மீ அடைப்பு

**இறந்த நேரம் நல்ல நேரமா ?**

நட்சத்திரம் அடிப்படையில் அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்த்திரத்தில் இறப்பு ஏற்படின் மட்டுமே தோஷம் என சாஸ்திரம் கூறுகிறது (சில ஜோதிட நூல்களில் கூடுதலாகவும் சில நட்சத்திரங்கள் கூறப்பட்டுள்ளது) இதற்கு குறிப்பிட்ட காலம் வரை அவர் இறந்த அறையை முடவேண்டும் பின்னர் காலக்கெடு முடிந்தவுடன் அறைக்கு வெள்ளை அடித்து தீபம் ஏற்றி பயன்படுத்தவும்

இறந்தவர் அறையை மூடமுடியவில்லை எனில் வாசலில் குறிப்பிட்ட மாதம் வரை தீபம் ஏற்றி பின்னர் கோவிலுக்கு நல்லெண்ணெய், தீபம் தானம் செய்யவும்

**கொள்ளி வைத்தவர் மலைக்கோவிலுக்கு செல்லலாமா?**

காரியம் முடிந்த பின்னர் அனைத்து பூஜை விஷயங்களில் முன்புபோல் கடைபிடிக்கலாம். முதலாம் வருட திவசம் (தலைதிதி) வரையில் மாசிகம் - மாததிதிக்கு முன்னாள் & மாததிதி அன்று ஆகிய இரண்டு நாட்களும் தவறாமல் வெளியூர் தவிற்த்து வீட்டில் வழிபாடு நடத்தும் வகையில் மலைக்கோவிலுக்கு சென்றாலும் சூரியன் அஸ்தமனமாவத்றகு முன்னர் வீடு திரும்பவேண்டும். பகல் பொழுதில் மலைக்கோவிலுக்கு செல்ல தடை இல்லை.

**இறந்தவர் வீட்டில் பண்டிகை கொண்டாடலாமா?**

முப்பேரன் முப்பேத்தி கண்டு இயற்கையாக இறந்தவர்களுக்கு எவ்வித தீட்டும் இல்லை. அந்த வீட்டிற்கு மட்டும் பிரேத தீட்டு உண்டு எனவே அந்த வீட்டை தவிற்த்து வெளியில் பண்டிகை கொண்டாடலாம். கொள்ளிபோட்டவருக்கு மட்டும் ஒரு வருடம் தீட்டு உண்டு.

**மரண வகையும் துக்கமும்**

முதுமையில் 3 தலைமுறை கண்டு பூரணமான வாழ்க்கை வாழ்ந்தவருக்கு இயற்கையான மரணம் ஏற்படின் துக்கம் என்பது 16 நாளுக்கு மட்டும்தான்.. இது 'கல்யானசாவு' என போற்றப்படுகிறது.

60வயதுக்கு குறைவாகவும், மகன் - மகளுக்கு திருமணம் செய்யாமல் மரணம் அடைந்தவர், தீவிபத்து, விபத்து, கொலை ஆகிய மரணங்களில் இறந்தவர் வீடு துக்கம் உள்ள வீடு ஆகும். இந்த வீட்டில் தலைதிதி வரை துக்கம் கடைபிடிக்க வேண்டும்.

**இறந்தவர் வீட்டில் சுபகாரியங்கள் செய்யலாமா?**

பிரேதம்(சவம்) இருந்தவீட்டில் தலைதிதி வரை தீட்டு (ப்ரேத தோஷம்) உண்டு. ஆயினும் ஏதேனும் சுபகாரியங்கள் திருமணம், நிச்சயதாம்பூலம் நடத்தவேண்டுமெனில் கணபதி ஹோமத்தை செய்து பின்னர் துவக்கவேண்டும்

**தர்ப்பணம் என்றால் என்ன**

மிகவும் எளிய தினசரி கடமை(நித்யானுஷ்டானம்), திவசம், ஷண்ணாவதி, மாதப்பிறப்பு சங்கரமணம், கிரகணம் போன்றுகாலங்களில் செய்யப்படும் முன்னோர் வழிபாடு இது

திவசம் அன்று மறுநாள் செய்யவேண்டிய தர்பணம் இப்பொழுது அன்றையதினமே பிண்டபூஜைக்கு பின்னர் செய்யப்படுகிறது

தர்பணம் செய்துவைக்க புரோகிதர் கிடைக்காத பட்சத்தில் தாங்களாகவே புத்தகம், இணைய வழியாக தர்பணம் செய்யவேண்டும்(அப்படி செய்தாலும் அன்னதானம் செய்வதை தவறக்கூடாது)

மிகவும் குறைந்தபட்ச முன்னோர்வழிபாடான தர்பணம்கூட தரவில்லை எனில் அது பித்ருதோஷத்திற்கான காரணமாக அமையும்

தர்பணம் எவ்வளவு முக்கியமோ அதுபோல் இயன்ற அளவு தான தர்மங்களை செய்யவேண்டும்

**திவசம் வழிபாடும் தத்துவமும்**

பிறப்பு என்பது நீர்குடம் (பனிக்குடம்) எனும் நீரில் பிறந்து அஸ்தியாக கடல், ஆறுகளில் வழியாக மீண்டும் நீரில் சேர்வது வாழ்க்கை. அந்த நீரில் வாழும் மீனுக்கு பொரி, சாதம், பிண்டம் கரைப்பு மிகமுக்கியான ஒன்றாகும்

தாய்க்கு ஈடாக நமக்கு பால் தரும் பசு - ஆவனித்திற்கு அகத்திகீரை, தீவனம் தருதல்

முன்னோர்கள் வாழும் பரவெளி-ஆகாயத்தில் பறந்து உயிர்வாழும் காகம், கருடன், குருவி போன்றவைகளுக்கு உணவு தானம். **அதுபோல் சகமனிதனுக்கும் அன்னதானம் என்பதுதான் சனாதன தர்மத்தின் நோக்கம்**

மறுபிறப்பு என்பது இந்துமத அடிப்படை நம்பிக்கை. ஆன்மா அழியாது அது மறுபடியும் உருமாற்றம் அடைந்து வேறுநிலையில் பிறக்கும், சக்தி அழிவற்றது என்பது கீதையின் தத்துவம் (Energy can neither be created nor destroyed)

**திவசம் கொடுக்க தேவையான பொருட்கள்**

திவசம் வீட்டில் அல்லது குளக்கரையில் செய்ய தேவைப்படும் பொருள்பட்டியலை கீழ்கண்ட எனது இணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்யவும் *www.prohithar.com/u_pooja_list/thevasam-list.pdf*

**கயாவில் திதி;**

ஏழு மோட்ச ஸ்தலங்களில் ஒன்றான **கயாவில் பிண்டம்** தருவது என்பது மிகவும் புனிதமான ஒன்று இந்துமத கடமைகளில் முக்கிமானது ஆயினும் அது வருடாந்திர திவசத்திற்கு ஈடானதல்ல. கயாவில் திதி தந்தாலும் வருடம் தோறும் வீட்டில் திதியை தவறாமல் தரவேண்டும். நாம் வாழும் வீட்டில் முன்னோர்களை அழைத்து தானம் தருமம் செய்வது கிரஹஸ்தரின் கடமை.

**காசியில் அஸ்தி கரைப்பு**

தலைதிதிக்கு முன்னர் காசி , இராமேஸ்வரம் அல்லது புனித ஸ்தலங்களில் அஸ்தியை கரைத்தல் நன்று. கரைத்து பின்னர் அங்கேயே தானம் செய்து கோவிலுக்கு சென்று வழிபடவும்

**முதல் வருட திதி (தலைதிதி - வருஷாப்தீகம் )எப்படி செய்வது;**

இறந்த திதி அடிப்படையில் முதல்வருட நினைவுநாளில் 16 இலைகளை போட்டு *தானம் தந்து முன்னோர்களுக்கு பிண்டம் வைத்து, தர்பணம் செய்து வழிபடுவதாகும். விரிவாக அறிய http://www.prohithar.com/thithi.html இணைய பக்கத்தை பார்வையிடவும்.

**இறந்தவர்களுக்கு வீட்டில் திதி கொடுப்பது எப்படி?**

புரோகிதரை முன்கூட்டி தொடர்புகொண்டு திதி செய்துவைக்க அழைக்கவேண்டும். திவசம் வழிபாடு 1.அக்னி அன்ன சிரார்தம், 2.ஹிரண்ய சிரார்தம், 3.தர்பணம் எனும் மூன்று வழிகளில் செய்யப்படும் இதில் தங்களின் வசதிப்படி சூழ்நிலைக்கு ஏற்ப செய்யவும்

திவசத்தில் தானம் என்பதும் புரோகிதர் தட்சனை என்பதும் வெவ்வேறான விஷயம்

**முதல் வருட திதி எங்கு கொடுக்க வேண்டும்?**

கண்டிப்பாக பிரேதம் இருந்த வீட்டில்தான் தரவேண்டும். சில தவிற்கமுடியாத சூழலில் அதேஊரில் வெளியில் உள்ள இதற்கான காரிய மண்டபத்தில் முதல்வருட திதியை தரவேண்டும்.

**இறந்தவர்களுக்கு திதி பார்ப்பது எப்படி**

எந்த மாதம் எந்த பட்சத்தில் எந்த திதியில் இறந்தார்களோ, அதே மாதம் அதேபட்சம், அதே திதியில் (எடுத்துக்காட்டு: ஆடி மீ தேய்பிறை சஷ்டி திதி என்றால் வருடம் தோறும் அதே ஆடி மீ வரும் தேய்பிறை சஷ்டி திதி)

புரோகிதரை முன்கூட்டி தொடர்புகொண்டால் முதல் வருட தலைதிதி மற்றும் வருடாந்திர திதி வரும் தேதியை பஞ்சாங்கத்தின் துணையுடன் அறிந்து தெரிவிப்பார்.

இறந்த ஆங்கில மாதம், தேதிக்கு சரியாக 45 நாட்களுக்கு முன்னர் திதி வரும் தேதியை அறிவது நல்லது தமிழ்மாதத்தில் திதி முதல் தேதியில் கூட சிலவேளை வரும், எனவே திதி தவறவிடக்கூடாது என்பதால் முன்கூட்டி அறிவது நன்று

**திதி - தெவசம் - சிரார்தம் - முதல் வருட திவசம் செய்ய சரியான நேரம்;**

சாஸ்திரப்படி பகல் பொழுதின் 5ல் நான்காம் பாகமான **அபரான்ன காலத்தில்** பிற்பகல் 1:12 மணிக்கு மேல் மாலை 3:36 மணிக்கு முன்னர் திதி-தெவசம்(சிரார்தம்) பிண்டம் வைத்து வழிபாடு செய்வது மிகவும் சரியானது

அல்லது பகல் பொழுதின் 15ல் 8ஆம் பாகமான **குதப காலம்** நண்பகல் 11:36 மணிக்கு மேல் நண்பகல் 12:24 மணி வாக்கில் திதி-திவசம்(சிரார்தம்), தர்பணம் செய்வது நன்று

கட்டாயம் வேலைக்கு செல்லவேண்டும் அல்லது தவிற்க முடியாத சூழலில் திவசத்தை முற்பகலில் செய்யலாம்

பாலு சரவண சர்மா

**ராகு காலம் எமகண்டம்:**

முதல்வருட திவசம் (தலைதிதி), வருடாந்திர திதி(தெவசம்-சிரார்தம்), தர்பணம் ஆகியவற்றிற்கு ராகு காலம், எமகண்டம் பொருந்தாது.

**இறந்தவர் கணவில் வருவது நல்லதா?**

இறந்தவர்கள் கணவில் வருகைத்தருவது நல்லது அவர்கள் ஆசிர்வதிக்கவே வருவார்கள் அதுபோல் கணவில் வருகை தந்தால் எழுந்தவுடன் காலையில் இயன்ற அளவு ஏழைக்கு அன்னதானம் செய்யவும்

**திவசம் (தெவசம்) படையல் ; திதி அன்று** மறைந்தவர் படத்தை சுத்தம் செய்து வடக்கு அல்லது கிழக்கு நோக்கி வைத்து சந்தனம், குங்குமம் இடவும். படத்திற்கு துளசி மாலை, வில்வ மாலை சாற்றுவது நல்லது

மரமணை வைத்து அதில் அவர் பயன்படுத்திய துணி, நகை, கண்ணாடி வைக்கவும்

2 குத்து விளக்கு (ஒரு முகம் ஏற்றவும்), மறைந்தவருக்கு பிடித்த இனிப்பு, காரம், பழங்கள்

தங்கள் குலவழக்கப்படி முழு தலைவாழையிலை படையல் போடவும்

ஓட்டலில் உணவு ஏற்பாடு செய்திருந்தாலும் படையலுக்காக வீட்டில் சர்க்கரை பொங்கல் செய்யவும்

**திவசத்தில் என்ன தானம் செய்யவேண்டும்?**

பசுவிற்கு தீவனம் தானம், பாடசாலைக்கு தேவையான பொருட்கள் தானம், ஆதரவற்றோர் இல்லத்தில் அன்னதானம் அனைத்துமே வசதிக்குட்பட்டு செய்யவேண்டும்

**தெவசம் அன்று அன்னதானம்**

தெவசம் (திவசம்) அன்று முன்னாள் கோதுமை தவிடு 2 கிலோ, அகத்திகீரை, வெல்லம் 1/4 கிலோ, வாழைப்பழம் 3 ஆகியவற்றை கலந்து ஊற வைத்து திவசம்(தெவசம்) அன்று காலையில் பசுவிற்கு தானம் செய்யவும்.

அன்றைய தினம் வேதபாடசாலை, ஆதரவற்றோர், ஊனமுற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு ஒரு வேளை உணவிற்கு ஏற்பாடு செய்யலாம்

சிவாகம வேதபாட சாலை, முடிச்சூர் : 94443 12367
மடிப்பாக்கம் ருக்வேத பாடசாலை : 97908 36426
சங்கரமடம் வேதபாடசாலை, குரோம்பேட் 73581 52211,98840 59265
இரும்புலியூர் ருக்வேத பாடசாலை : 98404 49797

குறிப்பு*; தானம் என்பது வேதபாடசாலைக்கு உணவு பொருட்கள், துணி மற்றும் தேவையான பொருட்களை தானம் தருவதாகும்

**சந்திர மாத அளவு:**

அமாவாசை முடிவு முதல் அடுத்த அமாவாசை முடிவு வரை synodic

29.530587981 days 29 d 12 h 44 min 2.8016 s (29 நாள் 12 மணி நேரம் 44நிமிடம் 2.8016 விநாடிகள்)

இது சராசரியாக ஒரு சூரிய மாதத்தைகாட்டிலும் குறைவான காலம் எனவே சில தமிழ் மாதங்களில் திதி இரண்டு முறை வரும். அதில் தோஷம் இல்லாத திதி கடைபிடிக்கப்படும்

கார்திகை, மார்கழி, தை மாதங்களில் ஒரு திதி விடுபட்டும் போகும் அப்பொழுது முன் அல்லது பின் வரும் மாத திதிகளில் திவசம் கடைபிடிக்கவேண்டும்.

சூரிய கிரகணம் அன்று 'கிரகணம் வானில் தோன்றும் இடங்களில் மட்டும்' வரும் அமாவாசை திவசம் திதி மறுநாள் கடைபிடிக்கப்படும்.

பவுர்ணமி திதியில் சூரிய உதயத்தில் நிகழும் சந்திர கிரகணத்தில் கிரகணம் முடிந்த பின்னர் பவுர்ணமி திதி திவசம் கடைபிடிக்கப்படும். மாலையில் சந்திர உதயத்தில் சந்திரகிரகணம் ஏற்படின் மறுநாள் திவசம் கடைபிடிக்கப்படும்.

வருட அளவில் சுமார் 11 நாட்களுக்கு முன்னதாக திதி வரும். அது முன்மாதத்தில் திதி அமைந்தால் இறந்த மாதத்தில் பின்பகுதியில் வரும் திதியை கடைபிடிக்க வேண்டும்.

பண்டிகைகள் முன்பின் வரும் ஆனால் திவச திதி என்பது இறந்த மாதத்தில் வருவதுதான் சரியான திதியாகும்

தெலுங்கர்களுக்கு பண்டிகையை ஒட்டி வரும் ஆனால் அது தமிழ் மாதப்படி இருக்காது


**திவசம் திதி (சிரார்த திதி) தீர்மானிப்பதில் உள்ள முக்கிய காரணிகள்**

1. அபரான்னம் (பகல் பொழுதில் 5ல் 4ஆம் பாகம்)
2. 2குதப காலம் (பகல் பொழுதில் 15ல் 8ஆம் பாகம்)
3. மாதப்பிறப்பு - ரவிசங்கரமனம்


பாலு சரவண சர்மா

4. சூரியமாத கால அளவு (விடுபட்ட திவச திதி விஷயத்தில்)
5. அமாவாசைக்கு சூரிய கிரகணம், பவுர்ணமிக்கு சந்திர கிரகணம்
6. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், நள்ளிரவு, திதி செய்யப்படும் இடத்தில் புவிநிலை அட்சரேகை, தீர்கரேகை

**திதிவகைகள்:**




1. <u>அதிக திதி:</u> ஒரு திதி இரண்டு நாட்கள் வரும்பொழுது அதில் எது உகந்ததோ அது சிரார்த திதி மற்றது அதிகதிதி ஆகும்.பஞ்சாங்கத்தில் இது **'அதிதி'** என சுருக்கமாக குறிப்பிட்டிருக்கும்

2. <u>சூன்ய திதி:</u> ஒரு திதி மாத முதலிலும் மாத கடைசியிலும் இரண்டு முறை வரும் நிலையில் எது சாஸ்திரப்படி சரியோ அது சிரார்த திதி எனவும் மற்றொமொரு திதி சூன்யதிதி ஆகும். பஞ்சாங்கத்தில் இது **'சூன்'** என சுருக்கமாக குறிப்பிட்டிருக்கும்

3. <u>திதித்துவயம்</u>: ஒரே நாளில் இரண்டு திதிகளும் அபரான்னத்தில் சாஸ்திரப்படி அதிகமாக இருப்பின் அன்று இரண்டு திதிகளுக்கும் திவசம் கடைபிடிக்க உகந்த நாளாகும். பஞ்சாங்கத்தில் **'திதித்வயம்'** என்று குறிப்பிடப்படும். சிரார்த திதி கட்டத்தில் இரண்டு திதிகளும் சுருக்கமாக குறிப்பிட்டிருப்பார்கள் (எ.கா; அ/ந என்றால் அஷ்டமி மற்றும் நவமி இரண்டு திவசம் திதிகளும் அன்றுதான் கடைபிடிக்கவேண்டும் என்று பொருள்)

4. <u>விடுபட்ட திதி</u>: சூரியனுக்கு அருகில் பூமி சுற்றும் காலமான தமிழ் மாதங்களான கார்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களில் திதி விடுபட்டு போகும் அப்படி விடுபட்டு போகும் திதி முன் அல்லது பின் மாதங்களில் கடைபிடிக்கப்படும். இதுகுறித்து பஞ்சாங்கத்தில் அந்த மாத பக்கத்தில் அடிப்பகுதியில், பண்டிகை விவர பகுதியில் குறிப்பிட்டிருப்பார்கள்.

தமிழ் பஞ்சாங்கத்தில் **'சிரா திதி'** என்று ஒரு பத்தி இருக்கும் அதில் அன்றைய தினம் என்ன திதிக்கு திவசம் என்று குறிப்பிட்டிருக்கும் அதுதான் சிரார்தம் கடைபிடிக்கவேண்டிய திதி ஆகும். இவைகள் அனைத்தும் சௌரமான முறையாகும். இதற்கும் சாந்திரமான(தெலுங்கு) முறைக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளது.

அதுபோல் பண்டிகைகளும் தமிழ் மாத திதியும் எப்பொழுதும் ஒன்றுபோல் வராது. சிலவருடங்களில் பண்டிகைகள் தமிழ்மாதப்படி முன் அல்லது பின் மாதங்களில் வரும். பண்டிகைகளை அடிப்படையாக கொண்டு திதி கடைபிடித்தால் அது தெலுங்கு முறை - சாந்திரமான முறையாகும். தமிழ்மாதங்கள் சூரியனை அடிப்படையாக கொண்டது

**வாக்கிய பஞ்சாங்க முறைப்படியும், திருக்கணித பஞ்சாங்க முறைப்படியும் சிரார்த திதி பஞ்சாங்கத்தில் தரப்பட்டிருக்கும் தங்களின் வீட்டு புரோகிதர் அறிவுரைப்படி சிரார்த (திவசம்) திதியை சரியான நாளில் கடைபிடிக்கவும்**

சிலநாட்களில் திதி இருப்பினும் முன்னாள் அல்லது பின்னாளில் திவசம் திதியை குறிப்பிட்டிருப்பார்கள்
திவசம் திதியை நிர்ணயம் செய்வதில் கணிதம், தர்மசாஸ்திரம் எனும் இரண்டு விஷயங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. வானசாஸ்திரம் அறிந்த பஞ்சாங்க கணிதக்ஞர் மற்றும் வேதம் படித்த தர்மசாஸ்திரம் விற்பன்னர்களால் திவசம் திதி என்று வருகிறது என தீர்மானிக்கப்படுகிறது

அதுபோல் ஒருஊருக்கான பஞ்சாங்கம் மற்ற ஊர்களுக்கு 'சிலநாட்களில்' முற்றிலும் பொருந்தாது ஆகவே உள்ளூர் புரோகிதரை ஆலோசித்து திதி அறிந்து திவசம் கடைபிடிக்கவேண்டும்.

**இறப்புக்குபின்னர் வரும் காலகட்டம்:**

| | |
|---|---|
| கிழமை: | அதேகிழமை எட்டாம் துக்கம் (ஏழாம்நாள் இரவு) |
| திதி : | அதே திதி வரும்நாள் மாசிகம்(30ஆம் நாள்) |
| நட்சத்திரம் | அதே நட்சத்திரம் 27ஆம் நாள் - ஊனமாசிகம் |
| பட்சம் | ஒருவர் இறந்த பட்சத்திற்கு எதிர்பட்ச திதி - 45ஆம் நாள்- 1 மண்டலம் - த்ரிபக்ஷ மாசிகம் |

**ஊனமாஸிகம் தவிற்க்க வேண்டிய தினங்கள்**

நந்தா திதி, சதுர்தசீ, அமாவாஸ்யை, வெள்ளிக்கிழமை. கிருத்திகா நக்ஷத்ரம், த்ரிபுஷ்கரம், த்விபுஷ்கரம்
ஜென்ம நக்ஷத்ரம் : ரேவதி
நந்தா திதி: பிரதமை, சஷ்டி, ஏகாதசி திதிகள்
த்ரிபுஷ்கரம்: கீழ்கண்ட திதி, நக்ஷத்ரம், வாரம் மூன்றும் சேர்ந்தால் த்ரிபுஷ்கரம்:
கீழ்கண்ட திதி, நக்ஷத்ரம், வாரம் இவற்றில் இரண்டு சேர்ந்தால் த்விபுஷ்கரம்
1 பத்ர திதிகள்: துவிதியை, சப்தமி, துவாதசி
2 கிருத்திகை, புனர்வஸூ, உத்ரபல்குனி, விசாகா, உத்திராஷாடா, பூர்வபாத்ரபதா
3 ஞாயிறு, செவ்வாய், சனி
த்ரைய பக்ஷிகத்தில் (40 -45) ஒற்றைப்படை நாள் விசேஷம்

**இறந்தவர்களுக்கு எந்த திசையில் வணங்கவேண்டும்**

தென்புலமே தர்மராஜன் திசை, முன்னோர்களுக்கு வழிபாடு செலுத்தும் திசையும் தெற்குதான்.
வீட்டில் தென்பகுதியில் (வடக்கு நோக்கி இருக்கும் வகையில்) இறந்தவர்களின் படத்தை மாட்டவும்

**பூஜை அறையில் இறந்தவர்கள் படம் மாட்டலாமா?**

மாதா பிதா குரு தெய்வம், தாய் - தகப்பனார் தான் முதல் இறைநிலை, அவர்கள்தான் முதல் வணக்கத்திற்கு உரியவர்கள். அவர்களின் திருவுருவ படத்தை பூஜை அறையில் வைப்பது, வணங்குவது சாஸ்திரப்படி சரியானது.

**இறந்தவர்கள் படத்திற்கு என்ன பூமாலை சாற்றவேண்டும்?**

சைவ முறைப்படி வில்வமாலை, வைணவ முறைப்படி துளசிமாலை சாற்றவேண்டும்.
மாலை என்பது அலங்காரம், வாசனை எனும் இரண்டுநிலைகளை கொண்டது. அலங்காரத்திற்காக பூமாலை சாற்றினாலும். வாசனைக்காக நல்ல மணம் வீசும் மலர்மாலை சாற்றலாம்
நிரந்தரமாக சந்தனமாலை சாற்றலாம்.

**திதி பெயர்கள் அட்டவணை (thithi name list)**

திதிகள் மொத்தம் 30 அவை வளர்பிறை15, தேய்பிறை 15 திதிகள்
ஒரு திதியின் பாகை அளவு $12^\circ$ . மொத்த திதிகளின் பாகை அளவு $360^\circ$ ($12^\circ * 30 = 360^\circ$)



பாலு சரவண சர்மா

சராசரி சந்திர சூரிய இணைவு மாத காலம் (அமாவாசை முதல் அடுத்த அமாவாசை வரை)
Mean length of synodic lunar month (new moon to new moon) 29.530589d = 29d 12h 44m 2.9s
29நாட்கள் 12மணி 44 நிமிடம் 2.9 விநாடிகள்


சந்திர உதயத்தில் இருந்து அடுத்த நிலவு உதயமாகும் சராசரி காலம் 24மணி 48நிமி 45.838 விநாடி
Lunar day between the raising of the Moon = 24h 48m 45.838s


ஒரு திதியின் சராசரி கால அளவு Mean duration of Tithi = 23h 37m 28.096s
ஒரு திதியின் அதிகபட்ச கால அளவு Maximum Duration of tithi 26h 47m
ஒரு திதியின் குறைந்தபட்ச கால அளவு Minimum Duration of tithi 19h 59m

| **வ. எண்** | **சுக்லபக்ஷம் (வளர்பிறை) திதிகள்** | | **பாகை** | | **கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை) திதிகள்** | | **பாகை** |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வளர்பிறை | பிரதமை | 000-012 | ✡ | தேய்பிறை | பிரதமை | 180-192 |
| 2 | வளர்பிறை | துவிதியை | 012-024 | ✡ | தேய்பிறை | துவிதியை | 192-204 |
| 3 | வளர்பிறை | திருதியை | 024-036 | ✡ | தேய்பிறை | திருதியை | 204-216 |
| 4 | வளர்பிறை | சதுர்த்தி | 036-048 | ✡ | தேய்பிறை | சதுர்த்தி | 216-228 |
| 5 | வளர்பிறை | பஞ்சமி | 048-060 | ✡ | தேய்பிறை | பஞ்சமி | 228-240 |
| 6 | வளர்பிறை | சஷ்டி | 060-072 | ✡ | தேய்பிறை | சஷ்டி | 240-252 |
| 7 | வளர்பிறை | சப்தமி | 072-084 | ✡ | தேய்பிறை | சப்தமி | 252-264 |
| 8 | வளர்பிறை | அஷ்டமி | 084-096 | ✡ | தேய்பிறை | அஷ்டமி | 264-270 |
| 9 | வளர்பிறை | நவமி | 096-108 | ✡ | தேய்பிறை | நவமி | 270-288 |
| 10 | வளர்பிறை | தசமி | 108-120 | ✡ | தேய்பிறை | தசமி | 288-300 |
| 11 | வளர்பிறை | ஏகாதசி | 120-132 | ✡ | தேய்பிறை | ஏகாதசி | 300-312 |
| 12 | வளர்பிறை | துவாதசி | 132-144 | ✡ | தேய்பிறை | துவாதசி | 312-324 |
| 13 | வளர்பிறை | திரியோதசி | 144-156 | ✡ | தேய்பிறை | திரியோதசி | 324-336 |
| 14 | வளர்பிறை | சதுர்தசி | 156-168 | ✡ | தேய்பிறை | சதுர்தசி | 336-348 |
| 15 | வளர்பிறை | **பவுர்ணமி** ○ | 168-180 | ✡ | தேய்பிறை | **அமாவாசை** ● | 348-360 |

திதியும் சந்திர பிறைவடிவமும்

சந்திரன் கிழக்கில் உதயமாகும் மணி நேரம் (சராசரி காலஅளவு)



# திதி கணிதம்

வானில் பூமிக்கு ஒரு நிலவு ஒரு சூரியன்தான் உள்ளது அப்படியிருக்க அமாவாசை முடிவு என்பது ஒரே நிகழ்வுதான். அதை யார் கணித்தாலும் எந்த முறையில் கணித்தாலும் திதியின் துவக்கம் முடிவு கண்டிப்பாக ஒன்றாகத்தான் வரவேண்டும். அப்படி வராமல் நிஜமான வானியல் நிகழ்வுக்கு விரோதமாக கால வேறுபாடு இருப்பின் அந்த பஞ்சாங்கம் பிழையானதாகும்.

**சூத்திரம்;**

சந்திர ஸ்புடத்தில் இருந்து சூர்ய ஸ்புடம் கழிக்க வருவது திதி ஸ்புடம்

திதி ஸ்புடத்தை 12ஆல் வகுக்க வருவது நடப்பு திதியாகும்

சந்நிர ஸ்புடம் சூரிய ஸ்புடத்தை காட்டிலும் குறைவாக இருப்பின் சந்திர ஸ்புடத்துடன் $360^{\circ}$கூட்டவும்°

**திதியின் முடிவு கணிதம்**

சந்திரன் ஒருநாளைக்கு கடக்கும் கோண அளவில் இருந்து சூரியன் ஓரு நாளைக்கு கடக்கும் கோண அளவை கழித்து வருவதாகும்

திதி இன்னும் கடக்க வேண்டிய கோண அளவு தொகையை 24 மணி கதியால் வகுக்க வரும் கால அளவு திதி முடிவு காலம்

Finding thithi - lunar phase calculation -
What to do if the panchanga is not available
--------------------------------------------

In this case, you have to have access to at least an ephemeris (such as the Nautical Almanac or the Astronomical Ephemeris) which lists the celestial longitudes of (among other bodies) the Sun and the Moon. These ephemerides are available in many libraries in the US and elsewhere.

Such ephemerides usually list the longitudes on a daily basis for Midnight GMT. In order to find the tithi at a given place at a given local time, we can first convert the local time to GMT and find the preceding midnight GMT and the succeeding midnight GMT. Then by simple interpolation, we can find the longitudes of the Sun and the Moon at the specified time and compute the tithi.

Let S_1 = longitude of the Sun at the preceding midnight GMT
S_2 = longitude of the Sun at the succeeding midnight GMT
M_1 = longitude of the Moon at the preceding midnight GMT
M_2 = longitude of the Moon at the succeeding midnight GMT

Let T = time at which the tithi is required in GMT, and expressed as a fraction of a day (for example, 12 noon GMT will be 0.5, 6 AM GMT will be 0.25, 6 PM GMT will 0.75, etc.)

Then the mean rate of the Sun's movement, r_S = (S_2 - S_1)
the mean rate of the Moon's movement, r_M = (M_2 - M_1)

(Here, by Sun's movement I only mean the apparent movement of the Sun in the zodiac. Since observations are from the earth, it is convenient to imagine that the Sun, Moon and planets move in the zodiac with respect to the observer on earth.)

The longitude of the Sun at time T, (say) S = S_1 + (r_S * T)
The longitude of the Moon at time T, (say) M = M_1 + (r_M * T)

(These longitudes are approximate because we assumed the motion of

the Sun and Moon is with constant speed. But this is not true in reality. The simple interpolation scheme will work in many cases, but for more accuracy, we need to compute the positions of Sun and Moon, without resorting to such interpolation. To do this we must have access to formulae from celestial mechanics. There are computer programs which do this kind of calculations.)

Once S and M are known, the tithi can be found by calculating (((360 + M - S) mod 360)/12) + 1.

Example: Suppose we want to find the tithi at 8:00 AM in New York on April 25. This time T in EDT will be 12 Noon GMT (EDT is 4 hours behind Greenwich Mean Time, GMT). Suppose the ephemeris lists the longitudes of the Sun as 20 degrees 30 minutes 0 seconds on April 25 at Midnight GMT and 21 degrees 30 minutes 0 seconds on April 26 at Midnight GMT, and the longitudes for the Moon as 140 degrees 10 minutes 0 secs on April 25 at Midnight GMT and 152 degrees 50 minutes 0 secs on April 26 at Midnight GMT.

Mean rate of Sun's motion = 21 degrees 30 mins - 20 degrees 30 mins
= 1 degree 0 mins 0 secs/day

Mean rate of Moon's motion= 152 degrees 50 mins - 140 degrees 10 mins
= 12 degrees 40 mins 0 secs/day

Given time T, at which tithi is required,
expressed as fraction of a day = 12 hours/ 24 hours
= 0.5 day

So longitude of Sun, S at time T = 20 deg 30 mins +
(1 deg/day * 0.5 day)
= 20 deg 30 mins + 30 mins
= 21 degrees 0 mins

The longitude of the Moon, M at time T = 140 deg 10 mins +
(12 deg 40 mins/day * 0.5 day)
= 140 deg 10 mins +
6 deg 20 mins
= 146 deg 30 mins

Once we have the longitudes of the Sun and the Moon at the given time, we can find the tithi.

tithi = (((360 + M - S) mod 360)/12) + 1
= (((360 + 146 deg 30 mins - 21 deg 0 mins) mod 360)/12) + 1
= (((360 + 125 deg 30 mins) mod 360)/12) + 1
= ((485 deg 30 mins mod 360 deg)/12) + 1
= (125 deg 30 mins)/12 deg + 1
= 10 + 1 = 11 ( Here the division is only integer division,
in which the remainder is neglected)

The tithi value of 11 indicates that it is the shukla pakSha ekAdashI, ie. the 11th lunar day in the bright half of the month.

Note: The longitudes found in the ephemerides I mentioned are actually with respect to the moving equinoxes. The Hindu calendar system considers the longitudes with respect to fixed equinoxes.

பாலு சரவண சர்மா

Such a system is called nirayana. The moving equinoxes system is called sAyana. The nirayana longitude of a celestial body differs from its sAyana longitude by a factor called AyanAMsha. Since the this AyanAMsha cancels out when we subtract the longitude of the Sun from the Moon, the tithi calculation as outlined above will still be correct. But in the calculation of nakShatra (asterism) at a given time, only the longitude of the Moon is involved. So in that case, we will have to consider the AyanAMsha and subtract it from the longitude of the Moon, before proceeding with the calculation

**திதி கணிதம், பஞ்சாங்க கணிதம், பாலு சரவண சர்மா, ஸ்ரீதணிகை பஞ்சாங்கம், கணிதக்ஞர்**
Progithar Balu Saravana Sarma, Almanac creator, Astrologer
www.thanigaipanchangam.com
www.prohithar.com

திதி - தெவசம் விளக்கம் thevasam Explanation

பாலு சரவண சர்மா